# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.10/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஆதிமூலம் | மதம் | : இந்து |
| த/பெ | : முத்து நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 50 | கிராமம் | : இலுப்பூர் |
| தொழில் : | விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**04.11.2024**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

2. என் அப்பா முத்துநாயுடுவின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **(இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் அப்பா முத்துநாயுடுவின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். **(வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 22.10.2020ம் தேதியிட்டு பட்டா எண்.236ல் என் பெரியப்பாவிற்கும் என் அப்பாவிற்கும் கொடுக்கப்பட்ட கூட்டு பட்டா தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** நான் வட்டாட்சியருக்கு கொடுத்த மனு புகைப்பட நகல் தாக்கல் செய்கிறேன். **(மனு வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(வழிகாட்டி மதிப்பு வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார். **(நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ 1 ஆகவும் வரைபடம் நீ.ம.சா.ஆ 2 ஆகவும் நில அளவையர் அறிக்கை, வரைப்படம் அடங்கிய கோப்பு நீ.ம.சா.ஆ 3 ஆகவும் புகைப்படங்கள் நீ.ம.சா.ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)